Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்

EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 49

## கிடை புதினம் காட்டும் இடையர் இன மக்களின் வாழ்வியல்

*முனைவர் சு.ரேணுகா தேவி எம்.ஏ., எம்.ஃபில்.,பிஎச்.டி.,*
*உதவிப்பேராசிரியர்;*
*ஜி.டி.என். கலைக்கல்லூரி, திண்டுக்கல்.*

### *முன்னுரை*

கி. ரா என்று சுருக்கமாக அழைக்கப்படும் கி. ராஜநாராயணன், கரிசல் இலக்கியத்தின் தந்தை என்று கருதப்படுபவர். கோவில்பட்டியின் அருகில் உள்ள இடைசெவல் கிராமத்தைச் சேர்ந்தவர். இவரின் கதையுலகம் கரிசல் வட்டாரத்து மக்களின் நம்பிக்கைகளையும், ஏமாற்றங்களையும், வாழ்க்கைப்பாடுகளையும் விவரிப்பவை. கரிசல் வட்டார அகராதி என்று மக்கள் தமிழுக்கு அகராதி உருவாக்கிய முன்னோடி இவரே. சாகித்ய அகாடமி விருது, இலக்கிய சிந்தனை விருது, தமிழக அரசின் விருது, கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருது எனப் பல விருதுகளுக்குச் சொந்தக்காரர். இத்தகைய சிறப்பு பெற்ற கி.ராஜநாராயணனின் கிடை புதினத்தை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது,

### கரிசல் நில அமைப்பு

"வட்டார இலக்கியத்தின் களமான 'வட்டாரம்' என்பது ஒரு பெரும் நிலப்பரப்புக்குள் அடங்கிய சிறுபகுதியாகும். அப்பகுதிகள் ஒவ்வொன்றும் அங்கே வசிக்கின்ற மக்களின் பண்புகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், பேச்சு வழக்குகள், நம்பிக்கைகள், அப்பகுதிகளின் தட்பவெப்ப நிலைகள் ஆகியவற்றால்

ஒன்றிலிருந்து மற்றொன்று மாறுபடுகின்றன. இவற்றிலெல்லாம் ஒத்த தன்மைகளைக் கொண்ட கிராமம் அல்லது பகுதிதான் வட்டாரம்" (H.R.Pate,I.C.S., Madras District GraZetter: Thirunelveli District,Vol.I, P.18) என்பர்.

கரிசல் வட்டாரமண் கருமைநிறம் உடையது. மண்ணின் அடிப்படையில் கரிசல் வட்டாரம் என்ற பெயர் உருவெடுத்திருக்கிறது. 'கரிசல்-பருத்தி வட்டாரம்' எனவும் அழைக்கப்படும். இப்பகுதியில் மூன்று மாதங்களே வளம் மிகுந்து காட்சி தரும். அப்போது ஓங்கி உயர்ந்து வளர்ந்து நிற்கும் கம்பும் சோளமும் கண்ணுக்குச் சிறிது விருந்தாகும். கட்டைக் குட்டையான பருத்திச் செடிகளும், உடை மரங்களும், கானல் நீரும் இந்த வட்டாரத்தின் சிறப்புத் தன்மைகளாகும். கிடை புதினத்தில் கரிசல் நில அமைப்பு வருணிக்கப்பட்டுள்ள விதத்தைக் காணமுடிகிறது.

"கருவை மரங்கள் பட்டுக் குஞ்சங்களைப் போல் மஞ்சள் நிறத்தில் உருண்டை உருண்டையாகப் பூத்திருந்தன.சாம்பல் நிறத்தில் பிஞ்சுக்காய்கள் சரம்சரமாகக் காய்த்துக் தொங்கின. நீர்க்கருவை மரங்களில் நிறையப்பிசின் தள்ளியிருந்தது. பிசினில் வெண்மையான பகுதியில் வெயில்பட்டு வைரம்போல் ஜொலித்தது" (கிடை

பக்.26-27)என்று கரிசல் நிலத்தின் அழகினை வருணிக்கிறார் கி.ரா.

## கரிசல் வட்டார இடையர் இன மக்களின் வாழ்வியல் முறை

கரிசல் வட்டாரத்தில் வாழும் இடையர் இன மக்களின் மொழிப்பயன்பாடு, தொழில், ஊர்க்கூட்டம், மருத்துவம், நம்பிக்கைகள், திருமண முறைகள் ஆகியவை குறித்த செய்திகள் இப்பகுதியில் இடம் பெறுகின்றன.

எளிமையான இம்மக்களைப் போலவே இவர்களுடைய வாழ்க்கை முறையும் மிக எளிமையாகவே காணப்படுகின்றது.

வட்டார மொழிப் பயன்பாடு:

ஒரு வட்டாரத்தைத் தனியே பிரித்து இனங்காட்டுவது அதில் வாழும் மக்களின் வட்டார மொழி வழக்காகும். உண்மையில் வட்டார இலக்கியம் உருவாவதற்குக் காரணமே பேசுவது போல எழுத வேண்டும் என்ற போக்குதான். கிடை புதினத்தில் இந்தப் போக்கு அதிகமாகக் காணப்படுகிறது.

" ஏலெ, வசங்கெட்ட பயபுள்ளே. பாங்கு தெரிஞ்சிதான் நடக்கியா? இவங்கெள்ளாம் என்ன மயித்துக்கு இங்கே வாராங்க? ஏமுலே, எங்கேயாவது தேனையும் தவிடையும் கொண்டுக்கிட்டு போங்களேமுலே! இங்ஙனே வந்து

உசுரை வாங்குறாங்க.” (கிடை ப.15)என்று ஆடுகளைப் பாங்கு பிரிக்கத் தெரியாத இடையனுக்கு வழங்கப்படும் வசவு சொற்களை எடுத்துக்காட்டுகிறார் படைப்பாளர். இதில் இடையர் இன மக்களுக்கே உரிய மொழி வழக்கைக் காணமுடிகிறது.

## தொழில்

உலகத்தின் தொழில்களில் முதல் தொழிலும், முதன்மையான தொழிலும் உழவே ஆகும். இது மற்றெல்லாத் தொழில்களுக்கும் முன் தொடங்கியது. இந்த விவசாயத்தையும் விவசாயத்திற்குத் துணைபுரியக்கூடிய கால்நடை வளர்ப்பையும் நம்பியே கரிசல் வட்டார மக்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். ஆடுகளை நம்பி வாழ்க்கை நடத்தக் கூடிய இடையர் இனமக்களின் வாழ்க்கையைப் பறைசாற்றும் விதமாகவே கிடை புதினம் அமைந்துள்ளது. இடையர் இனமக்களிடையே வழங்கக்கூடிய கிடை, கீதாரி, பாங்கு, துண்டங்கள் என்பதற்கான பொருள்களை ஆசிரியர் நாவலில் கூறிச்செல்வதிலிருந்தே வாசகனுக்கு அதன்மீது ஒரு ஈடுபாடும் பரிச்சயமும் ஏற்பட்டுவிடுகிறது. மேலும் இடையர் இனத்தைப் பற்றிய படைப்பாளரின் அறிவையும் உள்வாங்க முடிகிறது.

விவசாய நிலங்களுக்கு உரம் ஏற்றும் முறைகளில் ஒன்றுதான் கிடைபோடுதல் ஆகும். இரவு நேரங்களில் ஆடுகள் குறிப்பிட்ட விவசாய நிலப்பகுதிக்குள் அடைக்கப்பட்டு அவற்றின் எச்சங்கள் நிலத்திற்கு உரமாக மாற்றப்படுவதைத்தான் கிடைபோடுதல் என்பர். இவ்வாறு கிடை போடுவதற்கும் சில வரைமுறைகள் கிராமங்களில் பின்பற்றப்படுவதை கி.ரா. காட்டுகிறார். இதனை,

” கிடை என்பது ஒரு தனி ராஜ்யம். அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவன் உண்டு. அந்த தலைமை ஸ்தானாதிபதியின் பெயர்தான் ‘கீதாரி’ என்பது. கிடைக்கு என்று ஏற்பட்ட பூர்வீக வழிவந்த சில சட்ட திட்டங்கள் உண்டு. அதை யாருமே கொஞ்சம்கூட மீறக்கூடாது. ஆட்டுக்குட்டிகளின் கூடுகளை வரிசைப்படுத்தி வைப்பதற்குக்கூட ஒருமுறை உண்டு. அதற்கு ’வட்டம்’ என்று பெயர். நிலச் சொந்தக்காரர்கள் கொடுக்கும் கிடைக்கூலியான தானியத்தைக் கிடைக்காரர்கள் இந்த வரிசை முறைப்படிதான் வாங்கிக்கொள்ள வேண்டும்.”(கிடை.ப.14) என்ற வரிகளில் மூலம் அறியமுடிகிறது.

மேலும் ‘பாங்கு’ என்பதற்கான விளக்கத்தையும் தருகிறார் கி.ரா.

“ கிடையை எழுப்புகிற நேரத்தில் ஆட்டின் சொந்தக்காரர்கள் அல்லது அவர்களுடைய மேய்ப்பாளிகள் தங்களுடைய ஆடுகளை அடையாளம் பார்த்துக்

கிடையிலிருந்து மேய்ச்சலுக்கு எழுப்பி, ஒரு பக்கமாக ஒதுக்கி நிறுத்துவதைத்தான் 'பாங்கு' என்று சொல்லுவார்கள் " (கிடை.ப.14)

இடையர் இனமக்களால் வளர்க்கப்படுகின்ற செம்மறி ஆட்டின் பல வகைகளைக் காட்சிப்படுத்துகிறார் ஆசிரியர்.

"செவ்வாடு, அரியாடு, கருங்காத்து வெள்ளை, செங்காத்து வெள்ளை, வெங்காலாடு, மறை, போர், கரும்போர், செம்போர், வெள்ளைப்போர், தவிட்டுப்போர், மூளி, தாலி, கூளி, கறுவி, ராயாடு, சென்றாயாடு, கரிசையாடு, கரிசைப்போர், கண்ணாடிப்போர், கம்பளியாடு, சுட்டி, வெண்தலை, கொப்பாடு, கிடா, மோளைக்கிடா, கொச்சைக்கிடா " (கிடை.பக்.16-17) போன்றவை கரிசல் வட்டார நிலப்பகுதியில் காணப்படும் செம்மறி ஆட்டின் வகைகளாகும்.

மேற்காணும் செய்திகள் இயற்கையோடு இயைந்து வாழும் இடையர்களின் தொழில் குறித்த வாழ்வியலைச் சுட்டிநிற்கின்றன.

## ஊர்க்கூட்டம்

கிராமப்புறங்களில் பொதுவாக மிகவும் இன்றியமையாத ஊர் மக்கள் அனைவராலும் மதிக்கப்படக்கூடிய ஓர் அமைப்பு ஊர்ப்பஞ்சாயத்து ஆகும். "கிராம மக்கள் தங்களுக்குள் கருத்து வேற்றுமைகள் ஏற்படுகின்ற நேரங்களில் ஊர்த்தலைவர் மற்றும் ஊர்ப் பெரியவர்களின் ஆலோசனையை நாடுவர். அப்போது கூட்டம் கூட்டப்பட்டுச் சிக்கல்களைத் தீர்ப்பர். இதனைப் 'பஞ்சாயத்துப் பேசுதல்' என்பர் ". (கோபல்ல கிராமம், கி.ரா., பக்.20-21) ஊர்க் கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவிற்கு ஊர்மக்கள் கட்டுப்படுகின்றனர். இதனால் ஊர்க்கட்டுப்பாடு அவர்களிடம் காக்கப்படுகிறது.

விதவைப்பெண் ராக்கம்மாள் தன் பருத்திப் புஞ்சையில் ஆடுகள் விழுந்து அழிப்பு செய்ததற்காக கிடைமறிப்பு செய்த நிகழ்வும் இப்பிரச்சினையைப் பஞ்சாயத்துக் கூடி தீர்வு கண்ட முறை குறித்தும் கிடை நாவல்வழி அறிய முடிகிறது.(கிடை பக்.20-22)

## மருத்துவம்

"நாட்டுப்புற மருத்துவம் என்பது கிராமப் புறத்தில் வாழ்ந்த வாழுகின்ற மக்களால் இயற்கையில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு பணவிரயம் இன்றி நோய்களைக் குணமாக்கிக் கொள்ள உதவும் மருத்துவ முறையாகும். இது மரபு வழியாகப் பின்பற்றப்பட்டு வருகிறது "என்கிறார் ஆ.சண்முகம்.( பண்பாட்டுத் தளங்கள், சண்முகம்,ஆ., ப.41) கரிசல் வட்டாரத்தில் இடையர் இனமக்களால் பின்பற்றப்படும் மருத்துவ முறைகளைக் காட்டுகிறார் ஆசிரியர்.

" வயிற்றுக் கோளாறு உள்ள குழந்தைகளுக்கு, வெள்ளாடுகள் வயிற்றினுள்ளிருந்து இழுத்து அசைபோடும் 'உதவி'யை எடுத்து, கறந்த பாலுடன் உடனே கலந்து, சங்கால் அந்தக் குழந்தைகளுக்குப் புகட்டினர். கண்வலிக்காரர்கள், ஆட்டுக்காரர்களின் ஒத்தாசையுடம் வெள்ளாட்டம் பாலை, காம்பைப் பிடித்துத் தங்களின் நோயுடைய கண்களில் பீய்ச்சிக்கொண்டிருந்தார்கள்"(கிடை ப.13)எனப் பதிவு செய்கிறார்.

## நம்பிக்கைகள்

நன்று, தீது குறித்த எண்ணத்தால் ஆர்வம், அச்சம் ஆகியவற்றின் விளைவால் தமிழரிடையே காலங்காலமாகப் பல நம்பிக்கைகள் வழங்கிவருகின்றன. கரிசல் வட்டாரத்தில் வாழும் இடையர் இன மக்களிடமும் தங்களது தொழில் சார்ந்த செல்வ வளம் சார்ந்த நம்பிக்கைகள் சில வழங்கி வருவதை கி.ரா. கிடை புதினத்தின் வழி எடுத்தியம்புகிறார்.

"கொச்சைக்கிடா கிடைப்பது ஒரு பெரிய செல்வம் என்று கிடைக்காரர்கள் கருதுகிறார்கள். இது அபூர்வமாகவே வாய்க்கும் ஒருவருக்கு. கிட்ணக்கோனாருக்கு இதனால் கிடையில் மதிப்பு ஜாஸ்த்தி. தம்முடைய அதிர்ஷ்டமெல்லாம் இந்த கொச்சைக்கிடாயினால்தான் வந்தது என்ற நினைப்பு"(கிடை ப.18) என்ற வரிகள் கொச்சைக்கிடாய் இருந்தால் வீட்டில் செல்வம் பெருகும் என்ற இடையர் இன மக்களின் நம்பிக்கையை எடுத்தியம்புகின்றன.

## திருமணச் சடங்குகள்

மனித வாழ்க்கையில் 'திருமணம்' என்னும் வாழ்வியல் சடங்கிற்கு மிக முக்கியமான இடம் உண்டு. ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் ஒரு முறையே நடைபெறும் வாழ்க்கை அடிப்படைச் சடங்கே திருமணம்.

நாயக்கர் சமூகத்தில் ஆண்கள் திருமணத்தின் போது இருபெண்களை மணந்து கொள்ளும் முறை இருந்ததைக் காட்டுகிறார் கி.ரா. இதனை,

" எல்லப்பன் கல்யாணத்துக்குக் கொட்டகைக்கால் நாட்டினார்கள். அந்தச் சமூகத்தின் வழக்கப்படி அவனுக்கும் இரண்டு பெண்ஜாதிகள். ஒன்று சடங்கான பெண். இன்னொன்று சடங்காகும் பருவத்திலுள்ள பெண்!" (கிடை ப.59) என்ற வரிகளால் அறிய முடிகிறது.

## சாதிப்பாகுபாடும் தீண்டாமையும்

பண்டைத் தமிழ் மக்கள், 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்' என்பதையே கோட்பாடாகக் கொண்டிருந்தனர். மக்கள் பல்வேறு தொழில்களைச் செய்யத் தொடங்கிய காலத்தில் தான் தொழிலடிப்படையில் சாதிப்பிரிவுகள் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

கரிசல் வட்டாரத்தில் நிலவும் சாதிப்பாகுபாட்டினை கி.ரா. தனது புதினத்தில் கதைக்கருவாக்கி விளக்கிச்செல்வதைக் காணமுடிகிறது.

நாயக்கர் இனத்தைச் சார்ந்த எல்லப்பனுக்கும் பள்ளர் இனத்தைச் சார்ந்த செவனிக்கும் இடையே உருவான காதல் சமூகத்தின் மேல்தட்டு வர்க்கத்தினரால் ஒடுக்கப்பட்ட விதத்தை கிடை புதினத்தில் காணமுடிகிறது. எல்லப்பனின் கலியாண ஊர்வலமும் செவனிக்குப் பேயோட்டும் நிகழ்வும் இந்தச் சமூக முரணை உக்கிரமாகக் காட்டுகின்றன. (கிடை பக்.59-61) கிராமத்தின் சில வலியகரங்களால் சில தனிமனிதர்களின் வாழ்வு ரகசியமாக அழிக்கப்படுவதை இப்புதினம் எடுத்தியம்புகிறது.

## தொகுப்புரை

கரிசல் வட்டாரத்தில் வாழும் இடையர் இன மக்களிடையே வழங்கும் மொழி வழக்கை பிரித்து இனங்காட்டுவதோடு அம்மக்களிடையே வழங்கும் தொழில் சார்ந்த சில சொற்களையும் நம்பிக்கைகளையும் பிரித்தறிய இயலுகிறது. பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள இம்மக்களிடையே இயற்கை மருத்துவம் சிறந்தோங்கி இருப்பதையும் காணமுடிகிறது. இம்மக்கள் தங்களுக்குள் ஒன்றுபட்டு ஊரிற்குக் கட்டுப்பட்டு இருப்பினும் சாதி என்ற பெயரால் உயர்வு, தாழ்வு தழைத்தோங்கி பிரிந்து நிற்கும் தன்மையினையும் இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

## துணை செய்த நூல்கள்

1. சண்முகம்,ஆ., பண்பாட்டுத் தளங்கள், (நாட்டுப்புறவியல் ஆய்வு), அகல் வெளியீடு, சென்னை, 2003.
2. ராஜநாராயணன்,கி., கோபல்ல கிராமம், செல்மா வெளியீடு, சிவகங்கை, 1993.